1979 மார்ச் 8]

திரு. என். கிட்டப்பா : உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக் ஆக்கப்படும்போது ஏற்கனவே உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக இருந்தவர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக வரக்கூடிய தகுதி யின்மை காரணமாக அந்த நிலையில் இருந்து அவர்கள் நீக்கப் படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக இருந்தபோது வழங்கப்பட்ட சம்பளத் தொகை வழங்கப்படுகிறதா அல்லது அதைவிடக் குறைத்து வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, உயர்நிலைப் பள்ளிகளிலே தலைமையாசிரியர்களாக இருந்து, மேல் நிலைப் பள்ளிகளிலே தலைமையாசிரியர்களாக வராதவர்கள், வேறு உயர்நிலைப்பள்ளிகளிலே தலைமையாசிரி யர்களாக இருப்பார்கள், அரசுப் பள்ளிகளைப் பொறுத்தமட் டில்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இவ் வாண்டு மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன ? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், பாடப் புத்தகங்கள் காலதாமதமாகக் கிடைத் திருக்கிற காரணத்தினாலும், ஆசிரியர்கள் சரியாக நியமிக்கப் படாத காரணத்தாலும் தேர்வுகளில் அவர்களை வடிகட்டி விடாது மேல் வகுப்புகளுக்கு அனுப்புகின்ற ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, முழுத் தகவலும் என்னிடத்திலே தற்போது இல்லை, தோராயமாகச் சொல்கிறேன், 1 லட்சத்து 15 ஆயிரம் மாண வர்கள் புதிய 11-வது வகுப்பிலே சேர்ந்திருக்கிறார்கள். மாவட்ட அளவிலே தேர்வுகள் நடத்துமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்வுகளின் மூலமாகத்தான் தேர்ச்சியை நாம் கணிக்க இயலும்.

விழுப்புரம் பேருந்து நிலையம்.

*வினா எண் 285— திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் பேருந்து நிலையத்தை நவீன முறையில் மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) & (ஆ) விழுப்புரம் நகராட்சியின் ஆய்விலுள்ளது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போட்டது போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு, ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அது வந்திருக்கிறது, என்று கருதுகிறேன். விழுப்புரம் பேருந்து நிலையத்திலே பஞ்சாயத்து போர்டின் பார்வையிலே இருக்கின்ற பேருந்துகளும் துரித வண்டிகளும் இருக்கின்றன. இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டி இருக்கிற காரணத்தாலும், அங்கே அன்றாடம் ஆயிரக்கணக்கான பயணிகள் கூடுகிறார்கள் என்ற காரணத்தாலும் வண்டிகள் அங்கே நிற்பதற்குப் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தாலும் கழிவு அறைகள் போதுமானதாக இல்லாத காரணத்தாலும், அங்கே பக்கத்திலே ஒரு பெரிய குளம் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லபடுகிறது, அங்கே ஒரு பேருந்து நிலையத்தைத் துரிதமாகக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்த வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிக் குறைவை மனதிலே கொண்டு அங்கே புதிதாக பேருந்து நிலையம் அமைக்கும் முயற்சியை நகர வளர்ச்சி இயக்குநர் எடுத்து ஆணையருக்கு அறிக்கை அனுப்பிய பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சிகளில் வரி வசூல்.

* வினா எண். 286—திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரைகளின்படி ஊராட்சிகளின் வரி வசூலை கிராம சேவக்குகளின் பொறுப்பில் ஒப்படைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?